(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(8).]

# பாராளுமன்றத்தின்
# 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2026 மார்ச் 06, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2026 மார்ச் 17, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு மற்றும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரியுடன் கலந்தாலோசித்து, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2025 திசெம்பர் 29 ஆம் திகதிய 2469/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் மற்றும் சேவை நிபந்தனைகளை தீர்மானித்தல்,— ஊழல் எதிர்ப்புச் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம், முன்னைய மூன்று சட்டங்கள், அதாவது; (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டம், 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் மற்றும் தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டம் என்பவற்றை நீக்குவதற்கும்; அதற்கு பதிலாக அந்த சட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த அனைத்து தவறுகளையும் உள்ளடக்கியதாகவும் அதனை அமுல்படுத்துவதற்கான அனைத்து அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு வழங்கும் வகையில் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாலும்;

1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை விட கணிசமான அளவு பொறுப்புக்களை 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளதாலும்;

அந்த அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கான ‘இணைப்பு-I’ இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆளணியினர் தேவை என்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தீர்மானித்துள்ளதால், ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட விஷேட செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு, ஆணைக்குழுவிற்கு உதவும் அந்த ஆளணித் தொகுதிக்கு உயர் தகுதியும் அனுபவமும் வாய்ந்த அலுவலர்களை ஈர்ப்புடன் ஆட்சேர்ப்பு செய்து கொள்ளும் வகையிலான வேதனக் கட்டமைப்பை ஆணைக்குழு கொண்டிருப்பது அவசியமாதலாலும்;

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அவசியமெனக் கருதும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் மற்றும் சேவை நிபந்தனைகளை பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டுமென சட்டத்தின் பிரிவு 26(2) கீழ் குறிப்பிடப்பட்டுள்ளமையினாலும்;

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26(1) இன் கீழ் தீர்மானிக்கப்பட்ட ‘இணைப்பு-I’ இல் பட்டியலிடப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் தொடர்பான முன்மொழிவிற்கு ‘இணைப்பு-II’ முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகம் அவர்களின் 2025.08.11 மற்றும் 2025.12.19 ஆகிய திகதிகளிடப்பட்ட கடிதங்களின் மூலம் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாலும், அம்முன்மொழிவு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26(2) இன் பிரகாரம் உசிதமானதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாலும்;

மேற்படி வேதன முன்மொழிவின் கீழ், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான சுற்றுநிருபங்களின் விதிகளைப் பயன்படுத்துவதில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்புடைய சுற்றறிக்கைகளில் மேற்படி கொடுப்பனவுகளுக்கு உரிமையுள்ள அதிகாரிகளின் வகைகள்/பதவிகளை தீர்மானிக்க வேண்டுமாதலினாலும்;

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26 (2) இல் உள்ள சேவை நிபந்தனைகள், சட்டத்தின் பிரிவு 32 (1) இன் படி இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் ஆக்கப்படும் விதிகள் சட்டத்தின் பிரிவுகள் 32 (2) மற்றும் 157 (1) இன் படி குறித்த விதிகளை உருவாக்கும் அதிகாரங்கள் அந்த ஆணைக்குழுவிடம் இருத்தல் வேண்டுமென்பதாலும்; மற்றும்

1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுவில் பதவி வகித்த மற்றும் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஆணைக்குழுவில் இணைக்கப்படும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் (63 அலுவலர்களுக்கு அதிகரிக்காமல்), ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 163(2)(ஏ) பிரிவிற்கு ஏற்ப மற்றும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் புதிய ஆணைக்குழுவில் ஓய்வூதியத்துடன் கூடிய வேதனத்துடன் பொருத்தமான பதவியில் (ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26(1) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டது) மற்றும் பொருத்தமான வேதன நியதிகளுடன் உரிய சம்பளத் திட்டத்தில் பொருத்தமான பதவிக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

இதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26 (2) இன் பிரகாரம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் வேதனம் மற்றும் சேவை நிபந்தனைகளை தீர்மானித்தல் இப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

இணைப்பு - I

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26 (1) இன் பிரகாரம் அதன் செயல்பாடுகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையானதென ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் ஆளணியினர்

| பதவிப்பெயர் | | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 01 |
| 2 | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 01 |
| 3 | சிரேஷ்ட பணிப்பாளர் | 02 |
| 4 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 06 |
| 5 | பணிப்பாளர் | 09 |
| 6 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| 7 | சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் நாயகம் | 16 |
| 8 | உதவிப் பணிப்பாளர் நாயகம் | 58 |
| 9 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப்பணிப்பாளர் | 45 |
| 10 | உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| 11 | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 03 |
| 12 | நிர்வாக உத்தியோகத்தர் | 04 |
| 13 | போக்குவரத்து அலுவலர் | 01 |
| 14 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| 15 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 04 |
| 16 | சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | 47 |
| 17 | சிரேஷ்ட ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | 12 |
| 18 | புலனாய்வு உத்தியோகத்தர் | 337 |
| 19 | ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | 50 |
| 20 | நூலகர் | 01 |
| 21 | மொழி பெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் | 06 |
| 22 | உதவி சட்ட அலுவலர் | 07 |
| 23 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 06 |
| 24 | உதவி நூலகர் | 01 |
| 25 | ஊழல் எதிர்ப்பு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ** | 113 |
| 26 | தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் | 45 |
| 27 | தொடர்பாடல் உதவியாளர் | 07 |
| 28 | சாரதி | 69 |
| 29 | அலுவலக உதவியாளர் | 117 |
| **மொத்தம்** | | **971** |

** ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26(1) இன் படி ஆணைக்குழு ஆட்சேர்ப்பு செய்ய தீர்மானித்துள்ள பதவி “ஊழல் தடுப்பு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்” ஆகும். நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட பதவியின் பெயர் “முகாமைத்துவ உதவியாளர்” பதவியாகும். பதவிகளின் பெயர்கள் வேறுபட்டாலும் ஒதுக்கப்பட்ட கடமைகள் ஒத்த தன்மை கொண்டவை என்பதாலும், பல காரணிகளைக் கருத்தில் கொண்டும், ஆணைக்குழு “ஊழல் எதிர்ப்பு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்” என்ற பதவியின் பெயரைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளது.

இணைப்பு - II

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 26 (2) இன் பிரகாரம் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலுடன் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட வேதன முன்மொழிவு.

01. முன்மொழியப்பட்ட சம்பள திட்டம்

| | பதவி | சம்பளக் குறியீடு | ஆரம்ப கட்டம் | ஆண்டுகள் | 1ஆம் கட்டம் | ஆண்டுகள் | 2ஆம் கட்டம் | ஆண்டுகள் | 3ஆம் கட்டம் | ஆண்டுகள் | 4ஆம் கட்டம் | உச்சபட்சம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | AC-E 4 - 2025 | 212,000 | 10 | 4,950 | | | | | | | 261,500 |
| 2 | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் நாயகம் / சிரேஷ்ட பணிப்பாளர் | AC-E 3 - 2025 | 194,000 | 10 | 4,500 | | | | | | | 239,000 |
| 3 | பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ பணிப்பாளர்/ பிரதம உள்ளக கணக்காய்வாளர் | AC-E 2 - 2025 | 176,000 | 10 | 4,250 | | | | | | | 218,500 |
| 4 | சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 1-2 - 2025 | 151,900 | 10 | 3,900 | | | | | | | 190,900 |
| 5 | உதவிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 1-1 - 2025 | 131,300 | 10 | 2,940 | | | | | | | 160,700 |
| 6 | பிரதிப்பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் / உள்ளக கணக்காய்வாளர் / ஆராய்ச்சி அலுவலர் | AC-E 1 - 2025 | 131,300 | 10 | 2,940 | 10 | 3,595 | | | | | 196,650 |
| 7 | நிர்வாக உத்தியோகத்தர் | AC-JM 1-2 - 2025 | 74,010 | 10 | 1,360 | 18 | 2,040 | | | | | 124,330 |
| 8 | போக்குவரத்து அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 74,010 | 10 | 1,360 | 18 | 2,040 | | | | | 124,330 |
| 9 | தொழில்நுட்ப அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 74,010 | 10 | 1,360 | 18 | 2,040 | | | | | 124,330 |
| 10 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 74,010 | 10 | 1,360 | 18 | 2,040 | | | | | 124,330 |
| 11 | சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | AC-MA 5-3 - 2025 | 79,440 | 10 | 2,040 | 20 | 2,230 | | | | | 144,440 |
| 12 | சிரேஷ்ட ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | AC-MA 5-3 - 2025 | 79,440 | 10 | 2,040 | 20 | 2,230 | | | | | 144,440 |
| 13 | புலனாய்வு உத்தியோகத்தர் | AC-MA 5-1 - 2025 | 58,740 | 10 | 1,190 | 15 | 1,360 | 11 | 1,670 | | | 109,410 |
| 14 | ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | AC-MA 5-1 - 2025 | 58,740 | 10 | 1,190 | 15 | 1,360 | 11 | 1,670 | | | 109,410 |
| 15 | நூலகர் | AC-MA 4 - 2025 | 64,320 | 10 | 1,360 | 15 | 1,670 | 5 | 2,040 | | | 113,170 |
| 16 | மொழி பெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் | AC-MA 4 - 2025 | 64,320 | 10 | 1,360 | 15 | 1,670 | 5 | 2,040 | | | 113,170 |
| 17 | சட்ட உதவியாளர் | AC-MA 3 - 2025 | 53,940 | 10 | 800 | 11 | 1,190 | 10 | 1,320 | 5 | 1,350 | 94,980 |
| 18 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | AC-MA 2-1 - 2025 | 50,540 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 87,710 |
| 19 | உதவி நூலகர் | AC-MA 1-1 - 2025 | 46,220 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 83,390 |
| 20 | முகாமைத்துவ உதவியாளர் | AC-MA 1-1 - 2025 | 46,220 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 83,390 |
| 21 | தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் | AC-MA 1-1 - 2025 | 46,220 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 83,390 |
| 22 | தொடர்பாடல் உதவியாளர் | AC-MA 1-1 - 2025 | 46,220 | 10 | 540 | 7 | 630 | 4 | 890 | 20 | 1,190 | 83,390 |
| 23 | சாரதி | AC-PL 3 - 2025 | 43,280 | 10 | 490 | 10 | 540 | 10 | 590 | 12 | 630 | 67,040 |
| 24 | அலுவலக உதவியாளர் | AC-PL 1 - 2025 | 40,500 | 10 | 450 | 10 | 490 | 7 | 540 | 15 | 590 | 62,530 |

02. முன்மொழியப்பட்ட ஊழல் எதிர்ப்பு அபாய சூழ்நிலை கொடுப்பனவு

| | பதவி | சம்பளக் குறியீடு | ஊழல் எதிர்ப்பு ஆபாய சூழ்நிலை கொடுப்பனவு |
|---|---|---|---|
| 1 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | AC-E 4 - 2025 | 140,000 |
| 2 | சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 3 - 2025 | 128,750 |
| 3 | சிரேஷ்ட பணிப்பாளர் | AC-E 3 - 2025 | 48,000 |
| 4 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 2 - 2025 | 117,500 |
| 5 | பணிப்பாளர்/ பிரதம உள்ளக கணக்காய்வாளர் | AC-E 2 - 2025 | 44,000 |
| 6 | பணிப்பாளர் (புலனாய்வு) | AC-E 2 - 2025 | 70,000 |
| 7 | சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 1-2 - 2025 | 105,250 |
| 8 | உதவிப் பணிப்பாளர் நாயகம் | AC-E 1-1 - 2025 | 94,000 |
| 9 | பிரதிப்பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் / உள்ளக கணக்காய்வாளர்/ ஆராய்ச்சி அலுவலர் | AC-E 1 - 2025 | 33,000 |
| 10 | பிரதி/உதவிப் பணிப்பாளர் (புலனாய்வு) | AC-E 1 - 2025 | 52,000 |
| 11 | நிர்வாக உத்தியோகத்தர் | AC-JM 1-2 - 2025 | 19,000 |
| 12 | போக்குவரத்து அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 19,000 |
| 13 | தொழில்நுட்ப அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 19,000 |
| 14 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் | AC-JM 1-2 - 2025 | 19,000 |
| 15 | சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | AC-MA 5-3 - 2025 | 31,000 |
| 16 | சிரேஷ்ட ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | AC-MA 5-3 - 2025 | 20,000 |
| 17 | புலனாய்வு உத்தியோகத்தர் | AC-MA 5-1 - 2025 | 23,000 |
| 18 | ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | AC-MA 5-1 - 2025 | 15,000 |
| 19 | நூலகர் | AC-MA 4 - 2025 | 16,000 |
| 20 | மொழி பெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் | AC-MA 4 - 2025 | 16,000 |
| 21 | சட்ட உதவியாளர் | AC-MA 3 - 2025 | 14,000 |
| 22 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | AC-MA 2-1 - 2025 | 13,000 |
| 23 | உதவி நூலகர் | AC-MA 1-1 - 2025 | 12,000 |
| 24 | முகாமைத்துவ உதவியாளர் | AC-MA 1-1 - 2025 | 12,000 |
| 25 | தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் | AC-MA 1-1 - 2025 | 12,000 |
| 26 | தொடர்பாடல் உதவியாளர் | AC-MA 1-1 - 2025 | 12,000 |
| 27 | சாரதி | AC-PL 3 - 2025 | 11,000 |
| 28 | அலுவலக உதவியாளர் | AC-PL 1 - 2025 | 10,000 |

03.முன்மொழியப்பட்ட செயலாற்றுகை கொடுப்பனவு

சிரேஷ்ட புலனாய்வு உத்தியோகத்தர் மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையில் ரூபா 10,000/= வரை செயலாற்றுகை கொடுப்பனவு வழங்குதல்.

04. மேலே குறிப்பிட்ட 02 மற்றும் 03 தவிர முன்மொழியப்பட்ட பிற கொடுப்பனவுகள்

மேற்குறிப்பிட்ட ஊழல் எதிர்ப்பு அபாயசூழ்நிலை கொடுப்பனவு மற்றும் செயலாற்றுகை கொடுப்பனவுக்கு மேலதிகமாக, ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு பிற கொடுப்பனவுகளை (மேலதிக நேர கொடுப்பனவு/மேலதிக சேவை கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின கொடுப்பனவு, இணைந்த படிகள், வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, தொழில்முறை கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் தகவல் தொடர்பு கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்) வழங்குவதில் பொருந்தக்கூடிய சுற்றறிக்கை விதிகள் பயன்படுத்துதல்.

*

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல் தொடர்பாக 2026 பெப்ரவரி 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பின்வரும் விதப்புரைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) ன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:-**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், இலஞ்சம் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து, அதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(4) ன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:-**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், இலஞ்சம் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து, அதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.

*

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்,— இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2025.09.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2025.09.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2026, மார்ச் 18, புதன்கிழமை)

1865/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் உரித்துச் சான்றிதழ் வழங்குவதை அமுல்படுத்துகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(ii) இதுவரை மேற்படி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை யாது;

(iii) காணி நிர்ணய திணைக்களத்தின் கீழ் தற்போது சேவையாற்றி வருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் சட்டரீதியான அந்தஸ்தை இற்றைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், உத்தேச சட்ட மறுசீரமைப்புக்கள் யாவை;

(iii) மேற்படி சட்ட மறுசீரமைப்புக்களை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

1866/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'Clean Sri Lanka' சனாதிபதி செயலணியின் தற்போதைய அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) தற்போதுவரை மேற்படி கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு, நிறைவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) அக்கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி ஒவ்வொரு கருத்திட்டம் வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2024.12.19 ஆம் திகதிய 2415/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் I தொடக்கம் IX வரை விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பணியினதும் தற்போதைய முன்னேற்றம் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1930/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 9(அ) பிரிவைத் திருத்தி, முறைப்பாட்டாளரின் முகவரியின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அவகாசமளித்தல் பொருத்தமற்றது எனவும்;

(ii) மேற்படி 9(அ) பிரிவைத் திருத்தி சட்டத்தை முன்பிருந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி திருத்தத்தைத் துரிதமாக மேற்கொள்வதாக பாராளுமன்றத்தில் பலமுறை தெரிவித்துள்ளார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், அது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2026, மார்ச் 19, வியாழக்கிழமை)

1851/2026

கௌரவ அஜித்.பி.பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1989.11.13 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் திரு.ரோஹண விஜேவீரவின் மறைவின் பின்னர், அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளை பாதுகாப்பதற்காக அரசாங்கம் அவர்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அரசாங்கத்தின் பராமரிப்பின் கீழ் இருந்த ஆட்களுக்கும், திரு. ரோஹண விஜேவீரவுக்கும் இடையிலான உறவு முறை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆட்களை தடுத்து வைத்திருந்த இடங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது அரச பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினைப் பெறுகின்ற திரு. ரோஹண விஜேவீரவின் குடும்ப அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் குடும்ப அங்கத்தவர்களை பராமரிப்பதற்காக இதுரையில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மொத்த செலவு மதிப்பீட்டடிப்டையில் எவ்வளவு என்பதையும்;

(vi) தற்போது அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெறுகின்ற அக்குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்காக அரசாங்கத்தால் மாதாந்தம் செலவு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஏப்ரல் 10, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இனங்களின் அல்லது மதங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடுவதைத் தடை செய்தல்,— இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடல் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், இனங்களை அல்லது மதங்களைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டு தற்போது செயற்படும் அரசியல் கட்சிகளின் பெயர்களிலிருந்து அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகளை வழங்கல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபித்தல்,— தாக்குதல், கடத்தல், கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், கொலை மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்கும், ஊழியர்கள் பாதுகாப்பாக இலங்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2025

கௌரவ லால் பிரேமநாத்,— அடிமட்டத்தில் செயற்படும் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பிலும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,— மக்களுக்கு மிக நெருக்கமான மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களாக காணப்படுகின்ற அடிமட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலும் பெரும்பாலும் மக்கள் அதிருப்தியான நிலையில் இருப்பதால் இந்நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக அவதானம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2025

கௌரவ ரோஹண பண்டார,— பேராசிரியர் பதவிகள் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— தற்போது எமது சமூகத்திலுள்ள அநேகமானோர் பேராசிரியர், கலாநிதி போன்ற பதவிகளையும், பெயர்களையும் தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால், அதனை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப் படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.50/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பைனஸ் செய்கையால் நீர் மூலங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— விசேடமாக ஊவா மாகாணம் உட்பட மலையகப் பிதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பைனஸ் செய்கையால் நீர் மூலங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை அகற்றி, பயன்தரு உள்நாட்டு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2025

கௌரவ லால் பிரேமநாத்,— உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவில் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்,— கடந்த காலங்களில் இலங்கை முழுவதுமுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் பொது நிதியானது பாரியளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய சகல அலுவலர்களுக்கும் நிலவும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/2025

கௌரவ உபுல் கித்சிறி,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய மடுவன்வெல பிரபுமனை (வலவ்வ) முதற்கொண்டு இலங்கையில் புராதன பெறுமதி வாய்ந்த தலங்களைப் பாதுகாத்தல்,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான மடுவன்வெல பிரபுமனை முதற்கொண்டு இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான புராதன பெறுமதி வாய்ந்த தலங்கள் காணப்படுவதாலும், இத்தலங்கள் சுற்றுலா ஈர்ப்பைக் கொண்டுள்ளதாலும், தற்போது இவை கடுமையாக பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாலும், இவற்றின் மரபார்ந்த தொன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாத்து அத்தகைய தலங்களுக்குச் சொந்தமான காணிகளை துரிதமாக அளவை செய்தும் நிர்ணயம் செய்தும் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்த அவற்றைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— “இலங்கை பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக “பைத்துல்மால்” என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் (Student Counsellor) ஒருவரை நியமித்தல்,— தற்போது பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு உளவியல் சார்ந்த பின்னடைவுகள் காணப்படுவதனாலும், இந்த நிலைமைகள் அவர்களின் உடல் மற்றும் சமூக இருப்பில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துவதனாலும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்கென பாடசாலை உளவள ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி பதவியில் பாடசாலை ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளடங்குவதன் காரணமாக இதன் ஊடாக எதிர்பார்க்கப் படுகின்ற சேவைகள் பயனுறுதிமிக்கவாறு கிடைக்கப்பெறாமையினாலும், சகல பாடசாலை களிலும் உளவள ஆலோசகர் ஒருவரின் அவசியத்தன்மை எழுந்துள்ளதனாலும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் ஒருவரை நியமனஞ் செய்யத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— “ரட்டவிருவன்” (புலம்பெயர் வீரர்கள்) என்றழைக்கப்படும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்தல்,— இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தை உயிரூட்டுவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களால் வழங்கப்படும் பங்களிப்பு மிகவும் விசேடமானது என்பதனாலும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் பல வருட காலமாக தொழில் செய்த பின்னர் இலங்கைக்கு மீண்டும் வந்து தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்கின்றபோது ஒரு சில சந்தர்ப்பங்களில் மீண்டும் அவர்களுக்கு தொழில் புரிவதற்கான ஆற்றல் இல்லாததன் காரணமாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதனாலும், அரசாங்கம் அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்து குறித்ததொரு சதவீதத்தைப் பயன்படுத்தி ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபித்து, ஓய்வூதியத் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 60/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுத்தல்,— கடந்த காலத்தில் பாடசாலை ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உளவள ஆலோசனைக்கான பிரிவொன்றை நிறுவுதல், மாவட்டச் செயலகம் ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான அலகு ஒன்றை நிறுவுதல், அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் உளவள ஆலோசனைக்கான டிப்ளோமா கற்கைநெறிகள், பட்டப் படிப்பு கற்கைநெறிகள் மற்றும் பட்டமேற்படிப்பு கற்கைநெறிகளைப் போதித்தல், மன அழுத்தத்திற்குத் தீர்வுகாண ஒவ்வொரு பிரதான வைத்தியசாலையிலும் உளவியல் மருத்துவப் பிரிவுகளை ஆரம்பித்தல் போன்றவற்றால் இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளதால் அரசியல் அதிகாரத்தார், அரசாங்க அலுவலர்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அத்தகைய செயற்பாடுகளில் தீவிரமாக இடையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 61/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பிலுள்ள உணவகங்களில் மாணவர்களுக்கு பாதகமான உணவு வகைகளை விற்பனை செய்வதை நிறுத்துவதற்கான வழிமுறையொன்றை உருவாக்குதல்,— இலங்கையின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் பரவலாக கண்டறியப்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாலும், நீரிழிவு நோய்க்கு உணவு வகைகளுடன் உணவுப் பழக்கம் மற்றும் உணவு முறை ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் பாடசாலை கட்டமைப்பில் அமைந்துள்ள பாடசாலை உணவகங்களில் நீரிழிவு நோய்க்கு காரணமாகவுள்ள சீனி மற்றும் மா கலந்த உணவுகளுடன் பிரைட் ரைஸ், கொத்து, துரித நூடில்ஸ் போன்ற உணவு வகைகள் பெருமளவில் மாணவர்களுக்கு விற்கப்படுவதாலும், எமது நாட்டின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பாடசாலை உணவகங்களில் விற்கப்பட வேண்டிய உணவு மற்றும் பான வகைகள் தொடர்பாக அரசாங்கம் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரதத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் யாழ்ப்பாண பிரதேசத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்நாட்டின் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், யாழ்ப்பாணத்தை ஒரு உயிர்ப்பான கலாசாரப் பயண முடிவிடமாக மாற்றமுடியுமென்பதால், யாழ்ப்பாணமும் இலங்கையின் வட மாகாணமும் பிரதான கேந்திர இடங்களாக அங்கீகரிப்பதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பிரதேசத்தின் ஹோட்டல்கள், உணவு விடுதிகள் மற்றும் சேவை வழங்குனர்களுடன் இணைப்பை ஏற்படுத்தல், உண்மையான சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்தல், இலங்கையின் வட மாகாணத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையினையும் அவர்களின் திருப்தியையும் அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் இணைப்பு மற்றும் விற்பனையை மேம்படுத்துகின்ற கொள்கைகள் மற்றும் முதலீடுகளுக்காக ஆதரவளிக்கின்ற, பிரதேசத்தில் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்பாட்டாளர்களை வலுவூட்டுகின்ற மற்றும் கலாசார மரபுரிமைகளை மேம்படுத்தும் சுற்றுலாத்துறைச் சேவை வணிகத்தை ஊக்குவித்தல் மற்றும் அவற்றுக்கு வசதியளிப்பதன் மூலமும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சுற்றுலா கைத்தொழிலின் நிலையான அபிவிருத்தி மற்றும் பொருளாதார விருத்தியை மேம்படுத்துகின்ற அரச-தனியார் பங்காண்மையை மேம்படுத்துவதன் மூலமும் 12 முதல் 18 மாதங்களில் நிலைபேறான பொருளாதாரப் பயன்களை அடைந்துகொள்ளும் இலக்கை நோக்காகக் கொண்டு பிராந்தியத்தின் தொழில் மற்றும் வணிக வாய்ப்புகள் மீது அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை கண்காணிப்பதனூடாக யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்ட சுற்றுலா தளமொன்றை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியும் என்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.72/2025

கௌரவ கந்தசாமி பிரபு,— பால் உற்பத்தியில் தன்னிறைவினை ஊக்குவித்தல்,— நாடு தற்போது பால் இறக்குமதியில் தங்கியிருப்பது கணிசமான அந்நியச் செலாவணி இழப்புக்கு இட்டுச்செல்வதாலும், சிறந்த இன மாடுகளுக்கான, கால்நடைச் சேவைகளுக்கான, தீவனத்துக்கான மற்றும் உட்கட்டமைப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற பிரச்சினைகளுக்கு விவசாயிகள் முகங்கொடுப்பதாலும், மேலும், இச்சவால்களைத் தீர்ப்பது உணவுப் பாதுகாப்பினை அதிகரித்து, கிராமியத் தொழில்களை உருவாக்கி, இறக்குமதிகளில் தங்கியிருத்தலைக் குறைப்பதாலும், சிறந்த இன மாடுகளுக்கான அணுகல் மற்றும் கால்நடைச் சேவைகளை மேம்படுத்துவதன் மூலமும் தீவனப் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் மூலமும் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் மூலமும் பாற் பண்ணை விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமும் அரச – தனியார் பங்காண்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தி தொடர்பான ஆய்வினை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தியில் தன்னிறைவினை அடைவதற்காக அரசாங்கத்தினால் தேசிய பால் அபிவிருத்திக் கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பாலுற்பத்தியாளர் குழுக்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்காக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்றத்தின் சம்பந்தப்பட்ட குழு இதன் அமுல்படுத்தலைக் கண்காணித்து, மேலதிக நடவடிக்கைகளை விதந்துரைக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான மிகச் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல் அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல்,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையான புகையிரதப் பாதை மற்றும் மாத்தறையிலிருந்து கல்முனை வரையான புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதன் மூலம் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான மக்களுக்கு பயன் கிடைப்பதனால், மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— நீர்த்தாமரை செடியின் பரவலை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்,— நீர்த்தாமரை அல்லது Eichhornia crassipes (Mart.) Solms என்ற அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரம், தற்போது விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் முழுவதுமாக பரவிச் சென்றுள்ளதாலும், இதன் துரித வளர்ச்சி வேகத்தின் காரணமாக உள்நாட்டுத் தாவரங்களையும் விஞ்சி உயிரியல் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாலும், இதன் விளைவாக வண்டல் மண் படிந்து நீர் வழிப் பாதைகள் மற்றும் நீர் வழிந்தோடல் என்பன தடைப்படுவதனூடாக வெள்ளப் பெருக்கு நிலைமைகள் ஏற்படுவதாலும், அன்றாட பாவனைக்கு அவசியமான நீரின் தரம் மாசடைவதாலும் நீர் மின்னுற்பத்திக்கு தடையாக அமைந்துள்ளதாலும், இரசாயன களைக்கொல்லிப் பயன்பாட்டினூடாக அவற்றை அழித்தல், அந்நீரைப் பயன்படுத்தும் நபர்களுக்கு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும், இதன் விளைவாக ஏற்படும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தின் காரணமாக யானைக்கால் நோய் மற்றும் டெங்கு நோய் போன்றவை பரவி வருவதாலும், இத்தாவரத்தை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழிப்பதனூடாக நிலையான தீர்வினை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் அதற்கேதுவான கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் காலோசிதமானதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமை தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்தல்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்களுக்கு முரணாக ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் தகனம் செய்யப்பட்ட முஸ்லீம் மக்களின் ஜனாஸாக்களின் எண்ணிக்கை, அவ்வாறு தகனம் செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் போன்ற தகவல்களை விசாரிப்பதற்கும், இறந்தவர்களின் ஜனாஸாக்களை இவ்வாறு வலுக்கட்டாயமாகத் தகனம் செய்தமைக்கு ஏதுவான பின்னணி மற்றும் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்படவர்களின் உறவினர்களின் மனநிலை தொடர்பாக விசாரணை செய்வதற்கும், இதற்கு உடந்தையாக இருந்து வழிகாட்டுதல் களுக்கு முரணாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரசாங்க அலுவலர்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.81/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி பழங்களைப் பழுக்க வைப்பதைத் தடுப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பழச்சந்தையில் இயற்கையாகப் பழுத்த பழங்களுக்குப் பதிலாக, இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி அவற்றை செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இறக்குமதி செய்யப்படும் பழங்களையும் இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இப்பழங்களை பிள்ளைகள் அதிகம் உட்கொள்வதாலும், நேர்மையற்ற வணிகர்கள் இலாபம் ஈட்டும் நோக்கத்தில் நாட்டின் எதிர்காலத்தை அழிவுக்குட்படுத்தி மேற்கொண்டுவரும் இச்செயற்பாட்டை நிறுத்துவதற்கு உரிய வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,— அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator ) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குரித்தான சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களை தமது கட்சியின் நிதியத்தில் வைப்பிலிடுவதை நிறுத்துதல்,— அரசியல் கட்சிகள் தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை அத்தகைய அரசியல் கட்சிகளுக்கே மீளப் பெற்றுக்கொள்வதானது மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுயாதீனதன்மையை இழக்கின்றதொரு செயற்பாடாகும் என்பதாலும், இது சனநாயகத்திற்கு கடும் சவாலாக கருதப்படுவதனாலும், இவ்வாறு அரசியல் கட்சிகளினால் மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை தமது நிதியத்தில் வைப்பிலிடுதல் கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தைத் தாபித்தல்,— இன்றளவில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுவதாலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதாலும் இவர்களின் ஊடாக இவ்விடயம் மேலும் பரவி வருவதாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப் பொருள் பாவனையாளர்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது பாரிய பிரச்சினையாக மாறியிருப்பதாலும், அதற்கு தீர்வினை வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு புனர்வாழ்வளிப்பு நிலையமேனும் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையில் வன விலங்குகளை முகாமைத்துவம் செய்வதற்கு தேசியக் கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்தல்,— இலங்கை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உயிரியல் பல்வகைமை நிறைந்த ஒரு நாடாக கருதப்படுவதாலும், காடழிப்பு, மனிதர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக சட்ட விரோத வன விலங்கு வர்த்தகம், மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்குமிடையே அதிகரித்து வரும் மோதல்கள் காரணத்தினால் வருடாந்தம் வன விலங்குகளினதும் மனித உயிர்களினதும் இழப்பு பெருமளவில் இடம்பெறுவதாலும், புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் தேசிய வன விலங்குகள் முகாமைத்துவக் கொள்கையொன்றை வகுத்தல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கமாக இருப்பதாலும், அதன் மூலம் விலங்குகளின் வாழ்விடங்கள் பாதுகாக்கப்படல், மனிதனுக்கும் வன விலங்குகளுக்கும் இடையிலான மோதல்கள் குறைவடைதல் உள்ளடங்கலாக விவசாயிகளின் பொருளாதார நிலையும் சமூக வாழ்க்கைத் தரமும் மேம்படுவதாலும், அதன் பொருட்டு செயற்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான நவீன கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்து செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையின் விவசாய நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல்,— இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியத்துவமிக்க ஒரு துறையாக விவசாயத் துறை காணப்படுவதனாலும், விவசாய நிலங்களில் சுமார் 40 % மாத்திரம் வருடாந்த உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதனாலும், எஞ்சிய நிலங்கள் உரிய முறையில் திட்டமிடப்படாமை, நீர் வளப் பற்றாக்குறை, தொழிநுட்ப அறிவின்மை மற்றும் நவீனமயப்படுத்தப்படாமை ஆகியன காரணமாக பயன்படுத்தப் படாமையினாலும் உற்பத்திகளின் அளவு குறைவடைவதனால் வருடாந்தம் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது பாரிய பணத்தொகை செலவிடப்படுவதனாலும், விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை எதிர்வரும் ஒரு சில வருடங்களில் 30% இனால் அதிகரிப்பதற்கும், இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வணிக விவசாயத்தின் பரவலாக்கத்தை அதிகரிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சகல விவசாய நிலங்களையும் ஆய்வு செய்து நிலத்தின் வகை, பயிர்களுக்கு உகந்தநிலை, நீர் மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை தரவுத் தொகுப்பொன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களுக்கான கடற் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாகப் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பல தசாப்தங்களாகப் போதிய கடற் போக்குவரத்து வசதிகள் கிடைக்காதவர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக, அவர்கள் பல மணித்தியாலங்களைக் கடற் பயணத்தில் செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாலும், இவ்வாறான நிலைமையில் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பாடசாலைப் பணியாளர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி இப்பயணத்தின் போது பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதாலும் “கிராமமொன்றின் அபிவிருத்தி என்பது ஒரு தேசத்தின் அபிவிருத்தியாகும்” என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதாலும் அம்மக்களுக்களுக்காக நவீன, பாதுகாப்பான, துரிதமான மற்றும் நம்பகமான கடற் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 91/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— தலைமன்னார் — ராமேஷ்வரம் படகுச் சேவையினை ஆரம்பித்தல்,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க முடியும் என்பதாலும், இதன் மூலம் பொதுமக்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டுக்குப் பயணித்து, அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை இது இயலுமாக்கும் என்பதாலும் தலைமன்னாருக்கும் ராமேஷ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 93/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— அபிவிருத்தியில் நிலவும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு தனியானதொரு விசேட அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்,— வட மாகாணம், கிழக்கு மாகாணம், மொனராகல மாவட்டம் மற்றும் நுவரெலியா மாவட்டம் போன்ற பின்தங்கிய பிராந்தியங்கள் நீடித்து நிலவிய சிவில் முரண்பாடுகளின் தாக்கங்களாலும் வரலாற்று ரீதியான புறக்கணிப்புக்களாலும் தொடர்ந்தும் பல தசாப்தங்களாக கடுமையான பொருளாதார இழப்புக்களுக்கு முகங்கொடுத்து வருவதாலும்; தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் இப்பின்தங்கிய பிராந்தியங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்கள் மீது பாரபட்சமான சுமைகள் திணிக்கப்பட்டுள்ளதால் இந்த ஏற்றத்தாழ்வுகள் மேலும் உக்கிரமடைந்துள்ளதாலும்; பொருளாதார ரீதியில் பின்னடைந்த இந்தப் பிரதேசங்களில் ஒப்புரவுமிக்க வளர்ச்சியையும், நிலைபெறுதகு அபிவிருத்தியையும் பால்நிலை வலுவூட்டலையும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் இக்கரிசனைக்குரிய விடயங்களை நிவர்த்தி செய்வதற்கென தனியானதொரு தேசிய முன்னெடுப்பினைத் தாபிப்பது அவசியமாக இருப்பதாலும்; 250 மில்லியன் டொலர் தொகையினை இலக்காகக் கொண்டு, 10+2 ஆண்டு காலப்பகுதியிலான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அரசாங்கத்திடமிருந்தும் இருதரப்பு மற்றும் பல்தரப்புப் பங்காளர்களிடமிருந்தும் தனியார் முதலீட்டாளர்களிடமிருந்தும் மனிதாபிமானக் கொடையாளர்களிடமிருந்தும் கிடைக்கின்ற பங்களிப்புகளைத் திரட்டுவதற்கு ஒரு தேசிய அபிவிருத்தி நிதியத்தைத் தாபிப்பதற்கும்; அந்த நிதியினை விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் என்பவற்றின் மூலம் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தைப் புத்துயிர்ப்பிப்பதற்கும், தொழில் வாய்ப்பையும் மற்றும் பெண்களின் சமூகப்-பொருளாதார ஊக்குவிப்பையும் மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்வதற்கும், முடங்கிக் கிடக்கும் சொத்துக்களை செயலூக்கப்படுத்தி அவற்றை மீளப்பயன்படுத்துவதற்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் (SME) மற்றும் கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றுக்கு உதவுவதற்கும், மீள்புதுப்பிக்கத்தகு சக்தியிலும் மற்றும் ஏனைய வணிக ரீதியில் சாத்தியமான கூட்டுத் தொழில்முயற்சிகளிலும் முதலிடுவதற்கும், திறன் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் மற்றும் இளைஞர் யுவதிகளுக்குக் கல்வி கற்பிக்கப் பயன்படுத்தவும்; உள்ளூர் திறனாற்றலை கட்டியெழுப்புவதற்காக முதலீடுகளிலுள்ள சாத்தியமான இடைவெளிகளை ஒழித்தல், நிதிகளின் பயனுள்ள மற்றும் வெளிப்படைத் தன்மைமிக்க பயன்பாடு ஆகியவற்றினை உறுதிப்படுத்தி, தொழில்நுட்ப உதவி வசதியைத் (TAF) தாபிக்க உதவுவதற்கும்; பொருளாதாரச் செயற்பாடுகளிலும் தீர்மானமெடுத்தல் விடயங்களிலும் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கு அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்டு சகல முதலீட்டுத் துறைகளிலும் பால்நிலையின் உள்ளடக்கும்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும்; இலங்கையின் பிரத்தியேகமான அபிவிருத்தி, நல்லிணக்கம், நிலைபெறுதகு அபிவிருத்தி என்பவற்றுக்கான ஒரு அவசர தேசிய நடவடிக்கையாக அந்த நிதியம் தாபிக்கப்படுவதைக் கருத்திற்கொள்வதன் மூலம் கருத்திட்டச் செயற்படுத்துகையில் ஒப்புரவுமிக்க பிராந்திய உள்ளடக்கம், வகைப்பொறுப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் நிதியத்தை ஒருங்கிணைக்கக்கூடிய விதத்தில் அந்தந்த அமைச்சுக்களுக்கும் மாகாண சபைகளுக்கும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கும் அதிகாரமளிப்பதற்கும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 94/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கண்டல் தாவர சூழல்தொகுதியை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— சுற்றுச்சூழல் சமநிலைக்கும் கடற்றொழிலுக்கும் மிக முக்கியமானதாக அமையும் கண்டல் தாவர சூழல்தொகுதியைப் பாதுகாக்கும் பொருட்டு வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துதல்,— மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படும் நடைமுறை பெருமளவு ஊழல் நிறைந்ததாக மாறியிருப்பதனால், அந்நிலைமையை தடுப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 97/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்பங்களுக்கு ஊக்கவிப்புத் தொகையை வழங்குதல்,— 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் வருடாந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை தொடர்ச்சியாக விழ்ச்சியடைந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளதாலும் இதனால் எதிர்காலத்தில் இலங்கையில் இளைஞர் சனத்தொகை நிச்சயமாக வீழ்ச்சியடையக் கூடிய வாய்ப்பு உள்ளதாலும் இளைஞர் சனத்தொகை இவ்வாறு வீழ்ச்சியடையும்போது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் பாதகமான தாக்கங்கள் ஏற்படக் கூடும் என்பதாலும் இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்ப அலகுகளை கவரக்கூடிய ஊக்குவிப்புத் தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேம்படுத்துதல்,— இலங்கையில் செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழல் நேயமிக்க வலுசக்தி மூலாதாரமாக சூரிய மின்சக்தி அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், 2016.09.06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'சூர்யபல சங்ராமய' (Battle for Solar Energy) கருத்திட்டத்தின் மூலமாக தற்பொழுது 2000 இற்கும் அதிகமான மெகாவொட் சூரிய மின்சக்தி தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாலும், மின்சார அலகொன்றிற்கான விலையைக் குறைப்பதற்கான முறையியலாகவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான மூலோபாயத் திட்டமாகவும், 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேலும் மேம்படுத்தி பாதுகாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தல்,— களுத்துறை நகரத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா வலயமொன்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், களுகங்கையின் கழிமுகத்தையும் கடற்கரையையும் பாதுகாக்கும் உத்தியாகவும், கெலிடோ கடற்கரை மற்றும் களுகங்கையின் கழிமுகம் மாறியதன் காரணமாக புதிதாக உருவாகியுள்ள மேட்டுநிலம் உட்பட 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயம்' நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தல்,— களுத்துறை மாவட்டத்தில், 'மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தை' (Millaniya Export Processing Zone) நிர்மாணிப்பதற்குத் தேவையான 240 ஏக்கர் காணி ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ளதாலும், அக்கருத்திட்டத்திற்காக அதிவேக நெடுஞ்சாலை நுழைவு வழிகள், குழாய் நீர் மற்றும் மின்சாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் இன்றளவில் சுமார் ஒரு பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாலும், மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட காணி மிகப் பொருத்தமானதென இலங்கை முதலீட்டுச் சபை இனங்கண்டுள்ளதாலும், அந்த ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதனை அரசாங்கத்தின் முதன்மைக் கருத்திட்டமாகக் கருதி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— ஆங்கில மொழியில் இரண்டாம் நிலைக் கல்வி வழங்குவதை மேம்படுத்தல்,— அரசியலமைப்பின் 18(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 'ஆங்கில மொழி' இலங்கையின் இணைப்பு மொழியாக (Link Language) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாலும், சர்வதேச மொழியான 'ஆங்கில மொழி' குடிமக்களுக்கு அறிவைப் பெறுவதற்கான பிரதான மூலோபாயமாக அடையாளங் காணப்பட்டுள்ளதாலும், எந்தவொரு மொழியியல் அல்லது இனப் பாகுபாடும் இல்லாமல் ஒரு நாட்டில் வாழ்வதற்குத் தேவையான இணைப்பு மொழியாக ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் மிகவும் முக்கியமானதென்பதாலும், இலவசக் கல்வி எண்ணக்கருவின் கீழ் தோன்றிய இலங்கையின் மத்திய மகா வித்தியாலயக் கட்டமைப்பிற்குள்ளும் இன்னும் பல பாடசாலைகளிலும் ஆங்கிலத்தில் இரண்டாம் நிலைக் கல்வியை வழங்கும் முறையியல் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதாலும், இலங்கைக் குடிமக்கள் சர்வதேச வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்பது மிகவும் முக்கியமானது என்பதாலும், இலங்கையிலுள்ள அனைத்து இரண்டாம் நிலைப் பாடசாலைகளிலும் (Secondary Schools), 'ஆங்கில மொழி' மூலம் (English Medium) கல்வியை வழங்க வேண்டுமெனவும் அதற்கெனப் போதுமானளவு முதலீட்டைச் செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவுதல்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் நிர்மாணம், இயந்திரவியல், கைத்தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற் கொண்டு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/2025

கௌரவ ரோஹண பண்டார,— நீச்சல் திறமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல்,— நீரிழ் மூழ்கி உயிரிழக்கும் ஆட்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அண்மைக் காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதாலும், மிகச் சிறந்த நீர்ப்பாசன நாகரீகத்திற்கு உரிமைகூறும் பண்டைய கால மக்கள் மத்தியில் காணப்பட்ட நீச்சல் திறமைகளை, இன்றைய பரம்பரையினர் மத்தியிலும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 106/2026

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவுதல்,— இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் மருத்துவத்துறை உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற்கொண்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.108/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— தியகம வனத்தைப் பாதுகாத்தல்,— கொழும்புக்கு அருகாமையில் எஞ்சியுள்ள கடைசி நகர்ப்புறத் தாழ்நில மழைக்காடுகளில் ஒன்றாகவும் நகரத்திற்கு மிக நெருக்கமான மழைக்காட்டுப் பகுதியாகவும் தியகம வனம் காணப்படுவதனாலும்; பொல்கொட ஆற்றிற்கு நீர் வழங்கும் அதன் சதுப்பு நிலங்கள் மற்றும் நீரோடைகள் ஊடாக நீரோட்டத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இயற்கையான வெள்ளத் தடுப்பு அரணாக இது முக்கிய பங்கு வகித்து, அதன் மூலம் சுற்றியுள்ள சமூகங்களை வெள்ளப் பெருக்கிலிருந்து பாதுகாப்பதனாலும்; சிவப்பு தேவாங்கு, ஊதா முகக் குரங்கு மற்றும் கொடுபுலி போன்ற அழியும் அபாயத்திலுள்ள உயிரினங்கள் உட்பட 220 இற்கும் மேற்பட்ட தாவர மற்றும் விலங்கினங்களுக்கு இந்த வனம் வாழ்விடமாக அமைந்திருப்பதனாலும்; சுமார் 12.6% நிலப்பரப்புக்குரிய தாவர வளங்களுக்கும் 11.58% நிலப்பரப்புக்குரிய விலங்கு வளங்களுக்கும் கடைசிப் புகலிடமாக விளங்கும் ஒரு முக்கியமான பல்லுயிர் மையமாக இது திகழ்வதுடன், இவற்றில் பல விலங்குகள் நகர்ப்புற விரிவாக்கத்தினால் அதிகளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதனாலும்; தியகம வனம் அதன் தேவாங்கு இனங்களுக்காக சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதுடன் சுற்றுச்சூழல் - சுற்றுலாவுக்கான காத்திரமான சாத்தியத்தினைக் கொண்டிருப்பதனாலும்; உயிரியல் பல்வகைமை, காலநிலை மீண்டெழுந்தன்மை மற்றும் சமூகப் பாதுகாப்பைப் பேணுவதற்கு இந்த வனத்தைப் பாதுகாப்பது அவசியமானது என்பதனாலும்; தியகம வனத்தின் இழப்பானது ஈடுசெய்ய முடியாதது என்பதோடு, எதிர்கால சந்ததியினருக்காகவும் இலங்கையின் தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்காகவும்; அதன் உடனடிப் பாதுகாப்பு கட்டாயமானது என்பதனாலும் இந்தப் பாராளுமன்றம் தியகம வனப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் அனைத்து காடழிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (FFPA) கீழ் அதனைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டுமெனவும், அதனை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவர வேண்டுமெனவும், அத்துடன் எதிர்கால ஆக்கிரமிப்புகள் மற்றும் நிலைபேறற்ற அபிவிருத்திகளுக்கு எதிராகச் சாத்தியமான வலுவான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமெனவும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைத் தாபித்தல்,— வடக்கு கிழக்கில் சுமார் 26 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள், காணாமல்போதல் மற்றும் ஏனைய அழிவுகள் தொடர்பாக கண்டறிவதற்கும், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய அடுத்தகட்ட நகர்வுகளை ஆராய்வதற்குமான செயன்முறைகளை வலுவூட்டுவதற்காகவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவொன்று (Truth Commission) தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.110/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— 15 வயதிற்கு குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட வழிமுறையை அறிமுகப்படுத்தல்,— மிகுதியான சமூக ஊடகப் பயன்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் மன அழுத்தமும் மன உளைச்சலும் அதிகரித்தல், கல்விச் செயலாற்றுகையில் வீழ்ச்சி, இணையவழித் துன்புறுத்தல் (cyberbullying), நாகரிகமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உள்ளடக்கங்களை பார்க்க நேரிடுதல் போன்ற சிக்கல்கள் அதிகரித்து வருவதாலும், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், டென்மார்க் போன்ற வளர்ச்சி அடைந்துள்ள நாடுகள் சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை ஏற்கெனவே அறிமுகம் செய்துள்ளதாலும், சிறுவர்களின் உள ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் கல்விசார் வளர்ச்சியைப் பேணுவதற்காக சமூக ஊடக கணக்குகளைத் திறப்பதற்கான ஆகக்குறைந்த வயதாக 15 வயதை நிர்ணயித்தல், சமூக ஊடகக் கம்பனிகளுக்கு வயது மெய்யுறுதிப்படுத்தலை கட்டாயமாக்குதல், சட்டத்தை மீறுகின்ற நிறுவனங்கள் மீது அபராதம் விதித்தல் மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல், வயது வந்தவர்களின் கணக்குகளைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களை உசாவும் சிறுவர்கள் குறித்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற நகர்வுகளை முன்னெடுப்பதற்காக 15 வயதிலும் குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட ரீதியான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

## 2026 ஏப்ரல் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

209/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 250 போயர் (Boer) ரகத்தைச் சார்ந்த ஆடுகளை இனவிருத்தி செய்து பகிர்ந்தளிப்பதற்காக வகுக்கப்பட்ட ஐந்தாண்டுக் கருத்திட்டம், மாத்தளை, இம்புல்தண்ட ஆடுகள் இனவிருத்தி நிலையத்தில் எத்திகதியில் ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படிக் கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்தின் கீழ் வருடாந்தம் இனவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை மற்றும் உண்மையில் இனவிருத்தி செய்யப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை என்பன ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் ஊடாக ஈட்டிய வருமானம் மற்றும் ஏற்பட்ட செலவுகள் என்பவற்றுக்கமைவாக ஒவ்வொரு ஆடுக்காகவும் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படிக் கருத்திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

232/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தின் நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்படும் தரப்பினர் தமது மனக் குறைகளை முன்வைக்கக் கூடியவாறு 'விசேட பாராளுமன்ற ஒம்புட்ஸ்மன் ஒருவரை' நியமிப்பதற்கு 'வளமான நாடு- அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த வாக்குறுதியின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ள ஒம்புட்ஸ்மனின் பெயர் மற்றும் அலுவலக முகவரி யாதென்பதையும்;

(iii) இதுவரையில் அந்த நியமனம் மேற்கொள்ளப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

466/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 முதல் இற்றை வரை ஒவ்வொரு ஆண்டிலும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் இலாபம் யாவை என்பதை வெவ்வேறாகவும்;

(ii) இற்றை வரை அக்கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்குச் சதவீதம் மற்றும் மொத்த ஐந்தொகைப் பெறுமதி யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபனத்துடன் போட்டியிடுபவர்களின் பெயர்கள் மற்றும் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதியில் அவர்களுடைய சந்தைப் பங்கின் சதவீதம் மற்றும் மொத்தம் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) 2020 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஒவ்வொரு ஆண்டிலும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படும் நேரடி மற்றும் மறைமுக வரிகளின் தொகை யாவை என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அவற்றுக்குச் சொந்தமான பங்குகளின் தொகை ஆகியன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2020 முதல் இற்றை ஒவ்வொரு ஆண்டிலும் மேலே குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபனத்தில் —

(i) பணியாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் சம்பளம் மற்றும் ஊதியங்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை யாதென்பதையும்;

(ii) முதலீட்டு வருமானம் எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

883/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்பு உறுதி (Deeds of Grant) அல்லது காணி அனுமதிப்பத்திரம் (Land permits) வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்பு உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1032/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான லக்கல டிப்போவை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டத் திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போவை நிர்மாணிப்பதற்காக, இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) தற்போது மேற்படி டிப்போவின் வசமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) தற்போது இந்த டிப்போ அமைந்துள்ள காணி காடாகி வருவதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி டிப்போவை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1106/2025

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை இலங்கைக்கு கிடைத்துள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் மொத்தப் பெறுமதி அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அதனுடன் தொடர்புடைய முதலீட்டுக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய முதலீட்டு கருத்திட்டம் ஒவ்வொன்றினதும் தன்மை மற்றும் முதலீடு செய்துள்ள தொகை ஐக்கிய அமெரிக்க டொலர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) அத்தகைய முதலீட்டு கருத்திட்டம் ஒவ்வொன்றும் ஆரம்பிக்கப்பட்ட திகதி/ ஆரம்பிக்கப்படும் திகதி, பூர்த்திசெய்யப்படும் திகதி மற்றும் ஒவ்வொரு கருத்திட்டத்தின் மூலமும் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1124/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'வரையறுக்கப்பட்ட கொழும்பு டொக்யார்ட் பிஎல்சி' நிறுவனத்தின் (Colombo Dockyard PLC) முழு உரித்தும் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதையும்;

(ii) அந்த நிறுவனத்தில் வேறு பங்குதாரர்கள் இருப்பின், அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அரசாங்கத்திற்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் இடையிலான பங்குகளின் எண்ணிக்கை சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) ஏனைய பங்குதாரர்கள் வசமுள்ள சொத்துக்களின் பெறுமதி டொலர்களில் யாதென்பதையும்;

(v) தற்போதைய பங்குதாரர்களுக்கு பங்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ள ஆண்டுகள் யாவையென்பதையும்;

(vi) அவர்களுக்கு பங்குகளை விற்பனை செய்கையில் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், விலைமனுக்களை சமர்ப்பித்துள்ள ஒவ்வொரு பங்குதாரரினதும் பெயர், முகவரி மற்றும் சமர்ப்பித்துள்ள விலைமனுத் தொகை ஆகியன வெவ்றோக யாவையென்பதையும்;

(viii) மேற்படி ஒவ்வொரு பங்குதாரரும் கொள்வனவு செய்துள்ள பங்குகளுக்கு ஏற்ப முதலீடு செய்துள்ள தொகை வெவ்றோக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1244/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற வனசீவராசிகள் வலயங்கள் மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வனசீவராசிகள் வலயத்துக்குரிய காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வனசீவராசிகள் வலயங்களில் வனசீவராசிகளுக்காக காணப்படுகின்ற குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், வனசீவராசிகள் வலய வாரியாக அவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி வனசீவராசிகள் வலயங்களில் இன்றளவில் புனரமைக்கப்பட்டுள்ள அல்லது நிர்மாணிக்கப்பட்டுள்ள குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் விஞ்ஞானபூர்வமாக இனங்காணப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் யாவையென்பதையும்;

(iv) இனங்காணப்பட்டுள்ள காட்டு யானை வழித்தடங்கள் இதுவரை வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1472/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாண ஆளுநருக்குக் கிடைக்கப்பெற்றதொரு முறைப்பாட்டிற்கமைய நுகேகொடை, பரி.யோவான் கல்லூரியின் அதிபருக்கெதிராக 2025.06.04 ஆம் திகதி தொடக்கம் 2025.07.04 ஆம் திகதி வரையில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) விசாரணையை மேற்கொண்ட குழுவினால் மேற்படி விசாரணையானது பக்கச்சார்பின்றி முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த அதிபர் தொடர்பாக மேற்படி விசாரணைக் குழு முன்வைத்த விதப்புரைகள் யாவையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி விதப்புரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1934/2026

கௌரவ அஜித் கிஹான்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கடற்றொழில் துறைமுகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழில் துறைமுகங்களில் கடற்றொழிலுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி துறைமுகங்களில் படகுகளைத் திருத்தும்போது வெளியேற்றப்படும் கழிவுகளை முகாமை செய்வதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(v) துறைமுகங்களைச் சூழக் குவிந்துள்ள மணலை அகற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vi) கடந்த ஆட்சிக் காலத்தின்போது, இலங்கைக் கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் எதிர்பார்ப்புக்களும் குறிக்கோள்களும் அடைய முடிந்துள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(viii) கடற்றொழில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்து கடற்றொழிலாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கான ஒரு வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ix) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஏப்ரல் 22, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

748/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயணிகள் பேருந்து சேவையில் ஒன்றிணைந்த நேர அட்டவணை முறை முதன் முறையாக முன்மொழியப்பட்ட திகதி யான்பதையும்;

(ii) தற்போது மேற்படி ஒன்றிணைந்த நேர அட்டவணை முறை நடைமுறைப்படுத்தப்படும் வீதிகளின் எண்ணிக்கை சதவீத அடிப்படையில் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒருங்கிணைந்த நேர அட்டவணை முறை நடைமுறையிலுள்ள வீதிகளில் இலங்கைப் போக்குவரத்து சபைக்குரிய பேருந்துகளுக்கு குறைந்த அனுகூலங்கள் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி முறையை மீளாய்வு செய்து குறிப்பிட்ட வீதிகளில் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்து சபைக்குரிய பேருந்துகளுக்கும் நியாயமான வகையில் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

814/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்ற கட்டிடத் தொகுதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்படவுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நீதிமன்றக் கட்டிடத் தொகுதிகளில் தற்போது நிர்மாணப் பணிகள் நிறைவுபெற்றுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை மற்றும் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டடத்தொகுதிகளின் நிர்மாணப் பணிகளை விரைவில் நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

843/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹரகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்திற்குச் சொந்தமான காணியொன்று கடந்த காலப்பகுதியில் பறவைகள் பூங்காவொன்றை அமைக்கும் கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி காணியின் பரப்பளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி காணியைப் பெற்றுக்கொண்ட கம்பனியின்/கம்பனிகளின் பெயர்/ பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் மேற்படி கருத்திட்டம் செயலிழந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) இதனால் ஏற்படுகின்ற பாரிய சூழல் பாதிப்பு மற்றும் காணி மீட்டல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1015/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சைபர் மூலமான தொந்தரவுக் குற்றம், ஆன்லைன் துன்புறுத்தல், சைபர் அச்சுறுத்தல், அடையாளத் திருட்டு, இணக்கமற்ற அந்தரங்கமான உள்ளடக்கம் மற்றும் டிஜிட்டல் மூலம் ஆட்களின் தோற்றம் மாற்றப்படும் தொழில்நுட்பங்களின் தவறான பயன்பாடு போன்ற வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பெண்கள் தொடர்பான சைபர் குற்றப் முறைப்பாடுகளின் விபரங்களை வெவ்வேறாகவும்;

(ii) கடந்த மூன்று (03) ஆண்டுகளில் அத்தகைய குற்றங்களில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பிரிவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், கண்டறியப்பட்ட புதிய போக்குகள் யாவை என்பதையும்;

(iv) அத்தகைய குற்றங்களை வகை ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் வகைப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு பிரத்தியேக தரவு சேகரிப்பு மற்றும் கண்காணிப்பு பொறிமுறை நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1363/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஏதேனும் பாடசாலையொன்றில் எட்டு வருடத்திற்கும் அதிகமான காலம் சேவையாற்றி வருகின்ற அதிபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதிபர் ஒருவர் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக எட்டு வருடத்தை விட அதிகமான காலம் சேவையாற்றுவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டு மிகை ஊழியர் அடிப்படையில் அதிபர்களாக உள்ளீர்க்கப் பட்டவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளபோதும், அவர்களுடைய சேவைக்கான நிர்வாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததை அறிவாரா என்பதையும்;

(iv) அதற்கான தடைகள் யாவையென்பதையும்;

(v) பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு, மிகை ஊழியர் அடிப்படையில் சேவையாற்றும் அதிபர்கள் விண்ணப்பிப்பதற்குள்ள தடைகள் யாவையென்பதையும்;

(vi) எட்டு வருடத்திற்கும் அதிகமாக ஒரே பாடசாலையில் மிகை ஊழியர் அடிப்படையில் சேவையாற்றும் அதிபர்களுக்கு, இடமாற்றம் வழங்குவதற்குள்ள இயலுமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1373/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்விமாணி பட்டத்தை வழங்கும் அரச பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) 2025.01.01ஆம் திகதி முதல் இதுவரை மேற்படி ஒவ்வொரு பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்தில் கல்விமாணிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து, அரச ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தனியார் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டத்தின் தரம் தொடர்பாக பாரிய சமூகமட்டத்திலான கலந்துரையாடலொன்று ஏற்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) தனியார் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டம் மற்றும் பிற பட்டப்படிப்புகளின் தரத்தை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1470/2025

கௌரவ சானக மாதுகொட,— இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சந்தையில் விளையாட்டு உபகரணங்களின் விலை துரிதமாக அதிகரித்து வருவதால் கிராமிய விளையாட்டு வீரர்கள் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

(ii) விளையாட்டு உபகரணங்களின் விலை கிராமிய பிரதேசங்களில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதில் தாக்கம் செலுத்தும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை சலுகை விலையில் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) விளையாட்டு உபகரணங்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக அவற்றை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1736/2025

கௌரவ லால் பிரேமநாத்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களினால் மாத்தறை மாவட்டத்தில் தெலிஜ்ஜவில மத்திய மகா வித்தியாலயம் மற்றும் தெனியாய மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து முறையான அறிக்கையொன்று கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அத்தகைய வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களின் காரணமாக கல்வி நடவடிக்கைகள் மீது ஏற்பட்ட தடைகள் யாவை என்பதையும்;

(iii) இந்த நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்காக விசேட நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த ஒதுக்கீடானது ஒவ்வொரு பாடசாலைக்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே, நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்படாத கருத்திட்டங்களுக்கு இதன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பொறுப்புடைய நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இதுவரையில் பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்களை துரிதமாக ஆரம்பித்து அவற்றை பூர்த்தி செய்வதற்கு திட்டவட்டமான கால வரையறையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1855/2026

கௌரவ சுனில் ரத்னசிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களம் நிறுவப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) ஆரம்பத்திலும் தற்போதும் திணைக்களத்திற்குச் சொந்தமாகவுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஆரம்பத்திலும் தற்போதும் புகையிரத வீதிக் கட்டமைப்பின் மொத்த நீளம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) புகையிரதங்களின் எண்ணிக்கையும், புகையிரத வீதிக் கட்டமைப்பின் மொத்த நீளத்தையும் தற்போது வரை விரிவடைந்துள்ள அளவையும் கருத்திற் கொள்கையில், அந்த அதிகரிப்பு போதுமானதாக உள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், புகையிரதங்களின் எண்ணிக்கையையும் புகையிரத வீதிக் கட்டமைப்பின் நீளத்தையும் அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு 2026 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்கையில் இடம்பெறும் விபத்துகளைக் குறைப்பதற்கும், மாணவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் நடைமுறையில் உள்ள ஒழுங்குறுத்துகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நகர்ப்புறப் பிரதேசங்களிலுள்ள முறையற்ற நிர்மாணிப்புக்களை முறைப்படுத்தும் வேலைத்திட்டமொன்று காணப்படுகிறதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1907/2026

கௌரவ எம்.எஸ் உதுமாலெப்பை,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலஞ்சென்ற எம்.எச் மொஹமட் அவர்கள் அமைச்சு பதவி வகித்த காலத்திலிருந்து, தேசிய மீலாதுந் நபி விழா மாவட்ட மட்டத்தில் கொண்டாடும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) காலஞ்சென்ற ஏ.எச்.எம் அஸ்வர் அவர்கள் அமைச்சு பதவி வகித்த காலத்தில் தேசிய மீலாதுந் நபி விழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது என்பதையும்;

(iii) அதற்கு பின்னரும் மாவட்ட மட்டத்தில் அந்த விழா கொண்டாடப்பட்டது என்பதையும்;

(iv) அதன் மூலம் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட முஸ்லிம் பள்ளி வாசல்கள் புனரமைக்கப்பட்டதோடு, முஸ்லிம் கிராமங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2026 ஆம் ஆண்டில் தேசிய மீலாதுந் நபி விழாவை நடாத்துவதற்கு இன்றளவில் தீர்மானிக்கப்பட்டுள்ள மாவட்டமும் பிரதேசமும் யாது என்பதையும்;

(ii) அந்த விழாவை அலரி மாளிகையில் நடாத்துவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஏப்ரல் 23, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1184/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்ச்சோலை வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்கி வந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அந்தப் பாடசாலை மாணவர்கள் க.பொ.த (சாதாரண தர) பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கு இறுதியாக தோற்றிய ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி பாடசாலையின் பெயர் யாதென்பதையும்;

(v) அந்தப் பாடசாலையின் பெயரை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் யாவர் என்பதையும்;

(vi) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) அந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(viii) அந்தப் பாடசாலையின் பெயருக்காக அந்தப் பாடசாலையின் தாபகர் அல்லது பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக திகழ்ந்தவரின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1409/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசாங்க மற்றும் தனியார் துறை முதலீட்டுக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) முதலீட்டாளர்களை கவர்வதற்கு அரசாங்கம் வழங்குகின்ற சலுகைகள் யாவை என்பதையும்;

(iii) முதலீட்டார்களுக்கு சிரமங்களின்றி அரசாங்கக் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவான ஒரு செயன்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குகின்ற வகையில் முதலீட்டுச் சபையானது மாவட்டச் செயலகங்களில் விசேட அலகுகளை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அவை செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1475/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அல்லது இனங்காணப்பட்டுள்ள வன ஒதுக்கங்களின் அளவு மற்றும் வன ஒதுக்கங்களாக பிரகடனம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வனங்களின் அளவு ஹெக்டயர்களில் எவ்வளவு;

(ii) நீண்டகாலமாக வதிவிட தேவைகளுக்காக அல்லது பயிர்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும், பிற்காலத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள காணிகளின் அளவு மேற்படி மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி காணிகளில் மீள விடுவிப்பதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வெவ்வேறாக யாது;

(iv) திருகோணமலை மாவட்டத்தில் யானை-மனித மோதலைக் கட்டுப்படுத்துவதற்காகத் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1546/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தோட்டப்புறங்களில் உள்ள லயன் வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி லயன் வீடுகளில் வாழ்வதற்கு உகந்த சூழல் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்குரிய பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) உரிய பெருந்தோட்டக் கம்பனிகள் மேற்படி லயன் வீடுகளை உரிய முறையில் பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனவா என்பதையும்;

(iv) உரிய முறையில் பராமரிக்கப்படாதுள்ள லயன் வீடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1576/2025

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தினால் மலையக மக்களுக்காக ‘சிட்டி ரைடர்’ பேருந்துகள் வழங்கப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பேருந்துகள் வழங்கப்பட்டதன் குறிக்கோள் யாதென்பதையும்;

(iv) மேற்படி பேருந்துகளை வழங்கிய அமைப்புகள் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொண்ட அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அப்பேருந்துகளில் பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) மேற்படி பேருந்துகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vii) மேற்படி பேருந்துகளை தற்பொழுது பயன்படுத்தும் தரப்பினர் மற்றும் எவ்வகையான பணிகளுக்கு அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1637/2025

கௌரவ ருவன் விஜேவீர,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ‘செமட செவன’ கருத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மற்றும் முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்த கருத்திட்டத்திற்கான நிதி மூலம் யாதென்பதையும்;

(iii) இந்த வீடமைப்புத் திட்டத்திற்காக பயனாளிகளைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த கருத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை மற்றும் உண்மையில் செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1641/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் இயங்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி டிப்போக்களில் தற்போது சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) திருகோணமலை மாவட்டத்திலுள்ள டிப்போக்களின் பேருந்துகளையும் மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கு இற்றைவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1740/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவின் காரணமாக பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்கள் வீடுகளை இழந்தார்கள் என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற அமைப்புக்களினாலும் தனியார் காணிகளில் மற்றும் அரச காணிகளில் மாற்று வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி மாற்று வீடுகள் சர்வோதயபுரம், செங்காமம், ஹிஜ்ரா நகர், கனகர் கிராமம், கோமாரி 1 மற்றும் கோமாரி 2 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள அரச காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 18 வருடங்களைக் கடந்துள்ள போதிலும் இதுவரையில் அந்த மக்களுக்கு உரிய காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படாதுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மக்களுக்கு துரிதமாக காணி உறுதிகளை வழங்குவதற்கு எடுத்துள்ள அல்லது எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1789/2025

கௌரவ பீ. ஆரியவங்ச,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தோட்டக் கிராமங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி தோட்டக் கிராமங்களில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை கிராமங்கள் வாரியாக வெவ்வேறாக யாது;

(iv) அந்த கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1939/2026

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான மொத்தப் புகையிரத ஒதுக்குக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காணிகள் பயன்படுத்தப்படுகின்ற விதம் மற்றும் அதற்காக பின்பற்றப்படுகின்ற வழிமுறை யாதென்பதையும்;

(iii) புகையிரதப் பாதைக்கு இருபுறமாக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்குக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒதுக்கக் காணிகளைப் பாதுகாத்தல், துப்புரவு செய்தல் மற்றும் பராமரிப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) ஒதுக்குக் காணிகளை ஊடறுத்துச் செல்வதும் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் பராமரிக்கப்படுகின்றதுமான பாதைகளை அபிவிருத்தி செய்கின்ற போது, ஏற்படுகின்ற சிக்கல் நிலைமைகளை அறிவாரா என்பதையும்;

(vi) மேற்படி பாதைகளைப் புனரமைப்பதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 ஏப்ரல் 24, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

26/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி மாணவர்கள் உள்ளடங்கும் வயதுப் பிரிவுகள் யாவை;

(iii) அத்தகைய மாணவர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாது;

(iv) மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள பொதுவான காரணங்கள் யாவை;

(v) அது தொடர்பில் அரசாங்கம் வழங்கும் தீர்வுகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கம் மேற்படி பிரச்சனை தொடர்பாக முறையான ஆய்வொன்றை மேற்கொள்ளுமா;

(ii) இன்றேல், அவ்வாறான ஆய்வொன்றை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

135/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக இன்றளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பங்களாக்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பங்களாவையும்/உத்தியோகபூர்வ இல்லத்தையும் பயன்படுத்தும் அமைச்சரின்/பிரதி அமைச்சரின்/பாராளுமன்ற உறுப்பினரின்/பொதுமக்கள் பிரதிநிதியின் பெயர் மற்றும் பதவிப் பெயர் ஆகியன வெவ்வேறாக யாது;

(iii) பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு சிறப்புரிமைகளை / வசதிகளை வழங்குவது தொடர்பில் பாரிய சமூக எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், மக்கள் பிரதிநிதிகளுக்கு அவற்றை வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1717/2025

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய பொருளாதாரத் தரவுகளைத் திரிபுபடுத்தி (Data Massage) பொருளாதார வளர்ச்சி வேகம் மற்றும் பணவீக்க வீதப் பெறுமானங்கள் மாற்றப்பட்டுள்ளமையை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iii) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தின் அடிப்படைத் தரவுகளை மாற்றியமைத்து தேசிய வருமானத்தின் வருடாந்த வளர்ச்சி வேகம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதுடன் செயற்கையான முறையில் குறைந்த வருமானம் கொண்ட பொருளாதாரமெனக் காண்பித்து, உயர் வட்டி வீதத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக தந்திரமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(iv) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்படி ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்ட பொருளாதாரக் கொலையாளிகளுக்கும், 2022 ஆம் ஆண்டு நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததற்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1883/2026

கௌரவ சுனில் றாஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கல்விமாணிப் பட்டமளிக்கும் அரசாங்க கல்வி நிறுவனங்கள் யாவை;

(ii) மேற்படி பட்டமளிப்பிற்கான அரச சார்பற்ற கல்வி நிறுவனங்கள் யாவை;

(iii) அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணி பட்டமளிப்பானது ஆசிரியர் சேவைக்கான ஆட்சேர்ப்பின்போது சமமானதாக கருதப்படுகின்றதா;

(iv) இன்றேல், ஏன்;

(v) அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டப்படிப்பிற்கான கற்கைநெறிக் காலப்பகுதியும் உள்ளடக்கமும் சமமானதா;

(vi) இன்றேல், ஏன்;

(vii) குறிப்பிட்ட நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டப்படிப்பிற்கான கற்கைநெறியில் செய்முறைக் கற்பித்தலுக்கான பயிற்சி கட்டாயமானதா;

(viii) ஆமெனில், அதற்கான காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1885/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, சாய்ந்தமருது மற்றும் கல்முனை ஆகிய கரையோரப் பிரதேசங்களில் அமைந்துள்ள உள்ளூர் நீர் நிலைகள் கழிவுகளால் மாசடைந்திருப்பதோடு, பல் வகையான நீர்த்தாவர களைச் செடிகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி மூடப்பட்டிருப்பதையும்;

(ii) அதிகமான வண்டல் படிவு காரணமாக அத்தகைய நீர் நிலைகளின் ஆழம் குறைந்துள்ளதையும்;

(iii) மேற்படி நிலைமை காரணமாக, அந்த நீர் நிலைகளில் நீரைத் தேக்கி வைக்கும் திறன் குன்றி உள்ளதால் மழைக் காலங்களில் வெள்ள அனர்த்தங்கள் அதிகரித்துள்ளதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசங்களில் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் நீர் நிலைகளில் வண்டல் படிவு தொடர்பான முறையான மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) வண்டல் மற்றும் ஆக்கிரமிப்பு இன களைச் செடிகளை அகற்றுதல் அத்துடன் நீர்ச் சூழற்றொகுதியை நிலைபேறாக மீளமைப்பதற்கு ஒருங்கிணைந்த வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மேற்படி பிரதேசங்களில் அத்தகைய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1919/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, எதிரிசிங்க வீதி, கங்கொடவில பிரதேசத்தில் வதியும் அனுமதியற்ற குடும்பங்களை அப்பிரதேசத்திலிருந்து அகற்றி வேறு பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அக்குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றுள், வீடுகள் கிடைக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அக்குடும்பங்களுக்கு கொழும்பகே மாவத்தை அல்லது காலிங்க மாவத்தை ஆகிய பிரதேசங்களில் வீடுகளை வழங்காது மாளிகாவத்தை பிரதேசத்தில் வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1924/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் புலம்பெயர் ஊழியர்களின் குடும்பங்களைச் சேர்ந்ததும் பாடசாலை செல்வதுமான பிள்ளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்தத் திட்டம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அமுல்படுத்தப்படுகின்றதா;

(iv) பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றி வருகின்ற வெளிநாட்டுச் சேவை அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி அலுவலர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு 2-5, 6-10 மற்றும் 11-18 ஆகிய வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(vi) 2025 ஆம் ஆண்டுக்கென வழங்கப்பட்டுள்ள பாடசாலை உபகரணங்களின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில், மேற்படி தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை மேற்படி அ(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் உள்ளதா;

(ii) பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுதல் மறுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளனவா;

(iii) ஆமெனில், அது தொடர்பில் காணப்படுகின்ற அளவுகோல்கள் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

1926/2026

கௌரவ ரீ. கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் நாகொடை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ‘எப்தோப்’ தோட்டம் அரசாங்கத்தின் காணி என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அந்தக் காணி ஆரம்பத்திலிருந்து இது வரை உரித்து மாற்றம் செய்யப்பட்டுள்ள விதம் யாது;

(iii) மேற்படி காணியின் பரப்பளவு யாது;

(iv) மேற்படி காணியில், இன்றளவில் குடியிருப்பவர்களின் எண்ணிக்கை யாது;

(v) அத்தகைய குடியிருப்பாளர்கள் அனுபவிக்கும் காணியின் அளவு யாது;

(vi) காணியில் வசிக்காது, பயிர்ச்செய்கையை மட்டும் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை யாது;

(vii) அத்தகைய நபர்கள் அனுபவிக்கும் காணியின் அளவு யாது;

(viii) மேற்படி காணியின் மாதிரி வரைபடத்தை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காணியினுள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தால் அடையாளம் காணப்பட்டுள்ள ஆபத்தான வலயங்கள் காணப்படுகின்றனவா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1931/2026

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முகாமைத்துவத்திற்காகத் தனியார் நிறுவனங்களிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற பெருந்தோட்டங்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) சம்பந்தப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்களையும் அவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டுள்ள பெருந்தோட்டங்களின் பெயர்களையும்;

(iii) அத்தகைய ஒவ்வொரு பெருந்தோட்டத்தினதும் குத்தகைக் காலப்பகுதியை வெவ்வேறாகவும்;

(iv) ஒவ்வொரு பெருந்தோட்டத்திலும் சேவையாற்றும் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையை வகைகளின் அடிப்படையிலும்;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீதிகள், தொழிற்சாலைகள் மற்றும் லயன் அறைகள் உட்பட மேற்கூறப்பட்ட ஒவ்வொரு தோட்டத்தினதும் மொத்த நிலப்பரப்பு மற்றும் இலங்கைப் பெருந்தோட்டங்களின் மொத்த நிலப்பரப்பில் அதன் சதவீதத்தையும்;

(ii) கடந்த ஐந்து (05) நிதியாண்டுகளில் ஒவ்வொரு தனியார் நிறுவனமும் ஈட்டிய இலாபம் அல்லது அடைந்த நஷ்டத்தை வெவ்வேறாகவும்;

(iii) இது தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கிடைக்க கூடியதாக உள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அந்நிதிக் கூற்றுக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1938/2026

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1998 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை, தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ள முறை யாதென்பதையும்;

(ii) தற்போது நிரந்தர மற்றும் தற்காலிக சேவையில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தினால் அதிகரிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர் சம்பளத்திற்கு உரித்துடைய தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) சம்பளம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை அந்தத் தரப்பினருக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

(v) அதிகரிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை, தற்காலிக சேவையில் ஈடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?